28.01.2026 O.S. 276/2016 பி.வா.சா 1 விஜய் சிங்கராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

மர அறுவை ஆலை வைக்க வேண்டுமெனில் வனத்துறையிடம் உரிய அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். அதில் மர ஆலை இல்லை. மரத்தடிகள் வைக்கும் இடம் உள்ளது. மரத்தடிகள் வைக்க வேண்டுமெனில் வனத்துறையிடம் உரிய அனுமதி பெற வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு கந்தசாமி நாடார் வனத்துறையிடம் ஏதேனும் அனுமதி பெற்றுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. பாவூர்சத்திரத்தை ராமசந்திரன் என்பவருக்கு வழக்கு சொத்தை 2006ம் ஆண்டு டிசம்பர் முதல் மாதம் 1க்கு ரூ.1500/-த்திற்கு வாடகைக்காக கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் ராமச்சந்திரன் பருத்தி, மிளகாய் வத்தல் போன்றவற்றை காயப்படுத்தும் இடமாக பயன்படுத்தி வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் அவர் ஒரு ஷெட் அமைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு வாடகைகக்கு கொடுத்தற்கு எங்கள் சங்கத்திற்கும், ராமசந்திரனுக்கும் இடையே வாடகை ஒப்பந்தம் எழுதப்பட்டதா என்றால் இல்லை. வாய்மொழி ஒப்பந்தம் ஆகும். அவ்வாறு வாடகைக்கு கொடுத்தற்கு சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றி முறையாக ஒப்படைக்கப்பட்டதா என்றால் தெரியாது. அவ்வாறு வழக்கு சொத்தை ராமசந்திரனுக்கு வாடகைக்கு கொடுக்கவில்லை என்றும், வாடகைக்கு கொடுக்க உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 9 முதல் 16 வரையிலான ஆவணங்கள் வழக்கு சொத்தை குறிக்காது என்றால் சரிதான். வழக்கு சொத்தை சார்ந்த நான்கு

எல்கைகளை குறிக்கும் ஆவணங்களாகும். பி.வா.சா.ஆ 13 ஆவணத்தில் வழக்கு சொத்திற்கு எல்கை மால்களை குறிக்கும் விவரங்கள் உள்ளதா என்றால் அதில் 1,2 லக்க சொத்துக்களுக்கு எல்கை மால்கள் சொல்லப்படவில்லை. புல எண். 344 ம், பெயரும் சொல்லப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது பி.வா.சா.ஆ 16 ஆவணத்தில் எந்த பக்கம் அமைந்துள்ளது என்றால் அந்த ஆவணத்தை படித்து பார்ப்பதற்கு கடினமாக உள்ளது. வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் பி.வா.சா.ஆ 16 ல் காண்பிக்கப்பட்ட சொத்து உள்ளது. பி.வா.சா.ஆ 17 ஆவணத்தில் வழக்கு சொத்து மோசை நாடாருக்கு ஆதியில் பாத்தியப்பட்டு இருந்தது என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண். 343 ம், புல எண். 344/5 ஏ என்ற சொத்தும் ஒரே நபரான மோசை நாடாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ 20 ஆவணத்தில் வழக்கு சொத்தின் வகைபாடு தரிசு நிலம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தொழில் செய்து வருவதற்கான எந்த குறிப்பும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 22 ஆவணம் 2024 ம் ஆண்டு பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 22 ஆவணம் வழக்கிற்கு பின்னர் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 23, பி.வா.சா.ஆ 24 ஆவணங்கள் ஆன்லைனில் எடுத்தற்கான விபரங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 26 முதல் 28 வரையுள்ள பட்டாக்கள் அனைத்தும் வழக்கு சொத்தை குறிக்காகது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களான நான்கு மால்களை குறிக்கும். பி.வா.சா.ஆ 29 அடமான ஆவணத்தில் அடமான கொடுத்த நபர்கள் வாதிகளின் மூதாதையார்களான

மோசைநாடார் மற்றும் பால் நாடரை குறிக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 30 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பால்நாடார் வாதிகளின் மூதாதையார்களை குறிக்குமா என்றால் குறிக்கும். பி.வா.சா.ஆ 31 ஆவணத்தில் புல எண்.343 என்ற சொத்தை மயானத்திற்கு எழுதி கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்தை குறிக்காது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை குறிக்கும். பி.வா.சா.ஆ 32 வில்லங்க சான்று வழக்கு சொத்தை குறிக்காது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 32 எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 343 என்ற சொத்தானது முழு சொத்து என்பதால் அதனை கூறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மீண்டும் சாட்சி பி.வா.சா.ஆ 32 ஆவணத்தில் கண்ட புல எண்.343 என்ற சொத்தானது வழக்கு சொத்தை குறிக்கும் என கூறுகிறார். புல எண்.343 மற்றும் புல எண்.344/5 ஏ சொத்தும் சம்பந்தப்பட்டதை குறிக்கும் வகையில் வில்லங்க சான்று பி.வா.சா.ஆ 32 குறியீடு செய்யப்பட்டுள்ளது. புல எண்.344/5 ஏ சொத்திற்கான வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 34 லும் புல எண்.343 க்கான வில்லங்க சான்றிதழை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்.343 க்கும், வழக்கு சொத்திற்கும் தொடர்பு உள்ளதால் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ 35 ஆவணத்தில் புல எண்.343 ஐ தவிர்த்து மற்ற புலபட நகல்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற புல எண்கள் கொண்ட புலபடங்கள் நான்கு எல்கைகளை குறிக்கும் புலபடங்களாகும். பி.வா.சா.ஆ 36 புலவரைபடத்தில் புல எண்.344/5 ஏ சொத்திற்கு செல்ல பாதை எதுவும் உள்ளதாக காட்டப்பட்டுள்ளதா என்றால் அந்த சொத்திற்கு வருவதற்கு பாதை உள்ளது. அந்த சொத்திற்குள் பாதை எதுவும் இல்லை.

பி.வா.சா.ஆ 36 வரைபடத்தை யார் தயார் செய்தது என்றால் தனியார் பெறியாளரை வைத்து தயார் செய்யப்பட்டதாகும். அந்த பொறியாளரின் கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 36 ஆவணமானது எங்களுடைய வசதிக்கு ஏற்ப தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களது சங்கதின் தீர்மானம் மற்றும் துணை விதிகளை தாக்கல் செய்ய ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தானது வாதிகளின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், வழக்கு சொத்து வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எங்களுக்கோ எங்களது முன்னோர்களுக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. அதை அகற்ற கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.